### பிப்ரவரி 21, 22இல் கள ஆய்விற்காக

# கடலூருக்கு வருகை தரும் முதல்வருக்கு சிறப்பான வரவேற்பு!

## கடலூர் கிழக்கு மாவட்டத்தில் தீர்மானம், அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சிறப்புரை!

கடலூர், பிப். 6 -

கடலூர் வருகை தரும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு எழுச்சிமிகு வரவேற்பு அளிக்கப்படும் என கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கூட்டத்தில் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சிறப்புரையாற்றினார்.

கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க செயற்குழு கூட்டம்,04.02.2025, செவ்வாய்க்கிழமை மாலை 3 மணி அளவில், வடலூர் மங்கையர்க்கரசி திருமண மண்டபத்தில், கழக தேர்தல் பணிக்குழு செயலாளர் இள.புகழேந்தி தலைமையில் நடைபெற்றது.

கழக இளைஞரணி துணை செயலாளர் அப்துல் மாலிக், கழக செய்தித் தொடர்பு இணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா, சமூக வலைதள பயிற்றுனர் இளமாறன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினரும், கடலூர் கிழக்கு மாவட்டக் கழக செயலாளருமான எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சிறப்புரையாற்றினார்.

**முதல்வர் பிறந்தநாளை சிறப்புடன் கொண்டாடுவோம்!**

கீழ்க்காணும் தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

இந்திய துணைக் கண்டத்து முதல்வர்களில் முதன்மையானவர் என இந்திய தலைவர்களால் போற்றப்பட்டு தமிழ்நாட்டுக்கு திராவிடரியகத்திற்கு பெருமை சேர்த்து தன் உழைப்பால், ஆற்றலால், அன்பான பண்புமிகு உள்ளத்தால் அறிய தொரு செயல்களால் உலகமே பராட்டிடும் நம் ஆருயிர்த் தலைவர் தளபதியின் பிறந்தநாள் மார்ச் 1 அன்று நமக்கு மகிழ்வு நாள். கடலூர் கிழக்கு மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும் மக்கள் மகிழும் வண்ணம் மாணவ, மாணவியர் நலன்கள், மருத்துவ முகாம்கள் என கடலூர் கிழக்கு மாவட்டத்தில் உள்ள மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், 395 ஊராட்சி, 267 வார்டு ஆக மொத்தம் 662 இடங்களில் கழக கொடியேற்றி அனைத்து கழக நிர்வாகிகளும், கிளைக் கழகங்களிலும், அணிகளின் சார்பிலும் சிறப்பாக கொண்டாடுவது என முடிவுச் செய்யப்பட்டது.

**முதல்வர் வருகை சிறப்பான வரவேற்பு!**

முதல்வர் கழக தலைவர் அவர்கள் கடலூர் மாவட்டத்திற்கு வருகை தரும் 21.02.2025 வெள்ளிக்கிழமை, 22.02.2025 சனிக்கிழமை அன்று பெருமைமிகு அந்நாளில் நடைபெறவுள்ள வரவேற்பு, கழக நிகழ்வுகள் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாக்களில் கடலூர் கிழக்கு மாவட்ட கழகம் அறிவித்திடும் வண்ணம் மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக நிர்வாகிகள் மற்றும் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அனைவரும் கழக தோழர்களுடன் மாவட்ட கழக செயலாளர் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்களின் தலைமையில் கடலூர் கிழக்கு மாவட்டம் முழுவதிலும் இருந்து அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதல்வர் செயலாற்றல் வடிவமாக மக்களால் வரவேற்கப்படும் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவிப்புபடி கடலூர் கிழக்கு மாவட்டத்திலுள்ள கடலூர், குறிஞ்சிப்பாடி, புவனகிரி, சிதம்பரம், காட்டுமன்னார்கோயில் சட்டமன்ற தொகுதிகளில் கழக நிர்வாகிகள் சிறப்பாக ஏற்பாடு செய்திடும் பாக முகவர்கள், தேர்தல் களம் காண இளைஞர்களுக்கு சிறப்பான சமூக வலைதள பயிற்சியாளர்களை கொண்டு சமூக வலைதள பயிற்சிக் கூட்டம் நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது.

**கண்டன பொதுக்கூட்டம்!**

தமிழ்நாட்டை, ஒன்றிய அரசு நிதிநிலை அறிக்கையில் முழுவதுமாக புறக்கணித்துள்ளது கண்டித்து தொடர்ந்து தமிழக முதல்வர் நமது தலைவர் தளபதி அவர்கள் அரசு மூலமாகவும், நேரிலும், கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூலமும் வைத்துள்ள கோரிக்கைகளையும் செய்திடாமல் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடந்து வருவதை மக்கள் முன் வெளிப்படுத்திட மாநிலம் முழுவதும் பொதுக்கூட்டங்களை நடத்திட அறிவித்துள்ளார்.

கடலூர் கிழக்கு மாவட்டத்தில் தலைமைக் கழக அறிவிப்பின்படி 08.02.2025 சனிக்கிழமை அன்று வடலூர் நாகரில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர், கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில், தலைமை கழக பேச்சாளர்கள் சன். சங்கர், சோம.செந்தமிழ் செல்வன் கலந்து கொள்ள உள்ளனர். இப்பொதுக்கூட்டத்தில் கடலூர் கிழக்கு மாவட்டத்தில் உள்ள மாநகர, ஒன்றியம், நகர, பகுதி, பேரூர் கழகங்களில் இருந்து அனை வரும் வருகை தந்து கூட்டத்தை சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**இணையதளம் மூலம் பிரச்சாரம்!**

கழக இளைஞர் அணி சார்பில் புதியதாக நியமிக்கப்பட்டுள்ள ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கடலூர் கிழக்கு மாவட்டம் முழுவதும் களத்தில் சிறப்பாக செயல்படுவது, திராவிட மாடல் அரசின் சாதனைகளை சமூக வலைதளம் மூலம் பொது மக்களுக்கு தெரிவிக்கும் வகையில் சிறப்பாக செயல்பட வேண்டும் என தீர்மானிக்கப்படுகிறது

இந்நிகழ்வில் கழக பொறியாளர் அணி தலைவர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் துரை.கி.சரவணன், கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன், மாநரக மேயர் திருமதி சுந்தரிராஜா, தொகுதி பார்வையாளர்கள் சிதம்பரம் அ.பாரிபாலன், புவனகிரி எம்.எம்.சிவா, மாவட்ட துணை செயலாளர்கள் ஆர்.சக்திவேல், சுதா சம்பத், ஒன்றிய செயலாளர்கள்: காட்டுமன்னார்கோவில் மேற்கு அ.முத்துசாமி, குறிஞ்சிப்பாடி தெற்கு ஒன்றிய வி.சிவக்குமார், குறிஞ்சிப்பாடி வடக்கு ஆர்.நாராயணசாமி, திருமுட்டம் கிழக்கு தங்க.ஆனந்தன், பரங்கிப்பேட்டை வடக்கு முத்து.பெருமாள், குமராட்சி மத்திய ஆர்.ராஜேந்திரன், குமராட்சி கிழக்கு த.சங்கர், குமராட்சி தெற்கு ம.சோழன், குமராட்சி மேற்கு கே.நடராஜன், பரங்கிப்பேட்டை தெற்கு ஆர். கலையரசன், கம்மாபுரம் தெற்கு கே.ஆர்.ராயர், கம்மாபுரம் மத்திய பி.சுந்தர பாண்டியன், கடலூர் கிழக்கு தெ.காசிராஜன், கடலூர் மேற்கு பி.சுப்பிர மணியன்,

கடலூர் வடக்கு கே.ஆர். தனஞ்செயன், கடலூர் தெற்கு ஆர்.விஜயசுந்தரம், புவனகிரி கிழக்கு எம். மனோகரன், புவனகிரி மேற்கு ஏ.எஸ்.மதியழகன், கீரப்பாளையம் கிழக்கு வி.ஜி.பி.சபாநாயகம், கீரப்பாளையம் மேற்கு டி.திருமூர்த்தி, திருமுட்டம் வடக்கு எஸ்.செந்தில்குமார், திருமுட்டம் மேற்கு கே. ஆர்.கோவிந்தராஜ், காட்டுமன்னார்கோயில் கிழக்கு த.ஜெயபாண்டியன், கடலூர் மாநகர செயலாளர்: கே.எஸ்.ராஜா, கடலூர் பகுதி செயலாளர்கள்: ப.நடராஜன் பா.வெங்கடேஷ், எஸ்.சலீம், மூ.இளையராஜா, வடலூர் நகர கழக செயலாளர் த.தமிழ்ச்செல்வன், வடலூர் நகரமன்றத் தலைவர் எஸ்.சிவக்குமார்,

தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் வ.ஞானசேகரன், வே.விக்கிரமன் பொதுக்குழு உறுப்பினர்கள்: கே.பி.ஆர்.பாலமுருகன், விபி.பாலு, மு.வெற்றிவேல், என்டி.கணேசன், பா.கோதண்டபாணி,

பேரூர் செயலாளர்கள்: காட்டுமன்னார்கோவில் எஸ்.கணேசமூர்த்தி, குறிஞ்சிப்பாடி கு.வே.ப. ஜெய்சங்கர், புவனகிரி டி.கந்தன், சேத்தியாதோப்பு ப. மனோகரன், திருமுட்டம் பூ.செல்வ குமார், அண்ணாமலை நகர் க.பழனி, லால்பேட்டை பேரூர் எம்.அன்வர்சதாத், பரங்கிபேட்டை பேரூராட்சி மன்றத் தேன்மொழிசங்கர், கெங்கை கொண்டான் பேரூராட்சி மன்றத் தலைவர் பரிதா அப்பாஸ், மாவட்ட கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள்: இளைஞரணி ஜி. கார்த்திகேயன்,

மாணவரணி அமைப்பாளர் அப்புசந்தியநாராயணன், மகளிர் அணி அமைப்பாளர் த.அமுத ராணி, மகளிர் தொண்டரணி எஸ். மனோரஞ்சிதம், வழக்கறிஞரணி பி,அருள்ஜோதி,தொழிலாளர் அணி கி.தண்டபாணி, மீனவரணி வி.செல்வபாரதி, விவசாய தொழிலாளர் அணி எம்.ராமசாமி, வர்த்தகர் அணி ரெங்கநாதன், தொண்டர் அணி அரமுது, அமைப்பு சாரா ஓட்டுனர் அணி தாணூர் சிவக்கொழுந்து, ஆதிதிராவிடர் நலக்குழு ஆர்.பரந்தாமன், தகவல் தொழில்நுட்ப அணி ஏ.ஜாபர் அலி,

மற்றும் அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஏஎம்.மதியழகன், கே.மணிகண்டன், ஜி.முத்துகுமார், டி.குட்டிமணி ஜெகன், டி.பிரபு, மாநகர அமைப்பாளர் எ.ஜெயமணி, மாநகர துணை அமைப்பாளர்கள் எஸ்.ராம்குமார், எஎ.ஜெயச்சந்திரன், கே.குப்புராஜ், கேஜிஎஸ்டி. சரத் உள்ளிட்ட மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கடலூர் கிழக்கு மாவட்டக் கழக செயற்குழு கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சிறப்புரையாற்றினார். இதில் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

# செங்கல்பட்டு தடுப்பூசி மையத்தை தமிழ்நாடு அரசிடம் தாருங்கள்!

## நாடாளுமன்றத்தில் தமிழச்சி தங்கபாண்டியன் வலியுறுத்தல்!

புதுடெல்லி, பிப். 6-

தி.மு.க. எம்.பி. தமிழச்சி தங்கபாண்டியன் மக்களவையில் நேற்று முன்தினம், விதி எண் 377ன் கீழ் வலியுறுத்திய கோரிக்கை விவரம் வருமாறு:

தமிழ்நாட்டின் செங்கல்பட்டில் சுமார் ரூ. 800 கோடி முதலீட்டுடன் கூடிய ஒன்றிய அரசின் HLL பயோடெக் லிமிடெட் நிறுவனம் 12 ஆண்டுகளாக செயல்படாமல் உள்ளது.



இந்த திட்டத்திற்கான ஒப்புதல் வழங்கப்பட்டபோது அது தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்பட்டது. ஏனென்றால் பி.சி.ஜி., தட்டம்மை, ரேபிஸ், ஹெபாடைடிஸ் உள்ளிட்ட 75 சதவீத தடுப்பூசி தேவைகளை இது பூர்த்தி செய்யும் நோக்கத்தை கொண்டிருந்தது. இது இந்தியாவின் சுகாதார பாதுகாப்பிற்கு முக்கியமானது. ஆனால் அந்த நோக்கங்களை நிறைவேற்ற முடியவில்லை.

செயல்படாமல் இருக்கும் இந்த தடுப்பூசி மையத்தை தமிழ்நாடு அரசு பயன்படுத்த முடிவு எடுத்தது. எனவே, தடுப்பூசி மையத்தை குத்தகைக்கு தருமாறு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பலமுறை கேட்டுள்ளார்.

இந்த திட்டத்திற்கு நிலம் வழங்கியதே தமிழ்நாடு அரசுதான். அதனால், அதன் செயல்பாட்டுக்கு உரிமை கோருவது நியாயம் ஆனது.

எனவே, உள்நாட்டு தடுப்பூசி உற்பத்திக்கான அவசரத் தேவையையும், மகத்தான வளங்கள் வெறுமனே கிடப்பதையும் கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசுக்கு தடுப்பூசி மையத்தை தருமாறு ஒன்றிய அரசாங்கத்தை வலியுறுத்துகிறேன். மேலும், தமிழ்நாட்டில் தடுப்பூசி உற்பத்தி திறன்களை மேம்படுத்த கூனூரில் உள்ள பாஸ்டர் நிறுவன செயல்பாடுகளை மீண்டும் முன்னெடுக்குமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் வலியுறுத்தி உள்ளார்.

### தமிழ்நாட்டின் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அதிகரித்துள்ள கோதுமைத் தேவையை உயர்த்தி வழங்க எழுப்பிய கேள்விக்கு

# ஒன்றிய அமைச்சர் பிரல்ஹார்டு ஜோசி பொறுப்பான பதிலளிக்கவில்லை!

## மாநிலங்களவை உறுப்பினர் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் அதிருப்தி

புதுடெல்லி, பிப். 6-

தமிழ்நாட்டின் பொது விநியோக திட்டத்தின் கீழ் அதிகரித்துள்ள கோதுமை தேவையின் அளவை உயர்த்தி வழங்குவது குறித்து நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கேஆர்என்.இராஜேஸ் குமார் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. மாநிலங்களவையில் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. கலந்து கொண்டு, தமிழ்நாட்டில் தற்போது கோதுமைக்கான தேவை அதிகரித்து வருகிறது. தற்போதைய ஒதுக்கீடான மாதம் ஒன்றுக்கு 8500 டன் என்பதை 20000 டன் அளவில் உயர்த்தி வழங்க வேண்டும் என தமிழ்நாடு உணவு மற்றும் நுகர் பொருள் வாணிப கழகம், மத்திய அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளது. தமிழ்நாடு அரசின் இந்த கோரிக்கையை நிறைவேற்ற ஒன்றிய அரசு பரிசீலித்து வருகிறதா ?



என கேள்வி எழுப்பினார்

இதற்கு பதில் அளித்து பேசிய ஒன்றிய உணவு மற்றும் பொது விநியோக துறை அமைச்சர் பிரல்ஹார்டு ஜோசி, உணவுப்பொருள் வழங்குதலுக்கும், ஒதுக்கீடு செய்வதற்கும் உள்ள விகிதத்தின் படி தமிழ்நாட்டிற்கான கோதுமை வழங்கப்படும் என தெரிவித்தார்.

இதை அடுத்து கே.ஆர். என்.இராஜேஸ்குமார் எம்.பி தெரிவிக்கையில், மாநிலங்களவை கூட்டத்தில் நான் தமிழ்நாட்டின் அவசிய தேவையான கோதுமையை உயர்த்தி வழங்க கேட்டதற்கு, ஒன்றிய உணவு துறை அமைச்சர்

பொறுப்பான பதிலளிக்கவில்லை என அதிருப்தி தெரிவித்துள்ளார்.




சேலம் மாவட்டம், இராமநாயக்கன்பாளையத்தில் நேற்று முன்தினம் (4.2.2025) நடைபெற்ற "மக்களுடன் முதல்வர்" மூன்றாம் கட்ட முகாமில் பெறப்பட்ட மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நலத்திட்ட உதவிகளை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வி.கணேசன் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் இரா.பிருந்தா தேவி, மாவட்ட வருவாய் அலுவலர் இரா. ரவிக்குமார், ஆத்தூர் வருவாய் கோட்டாட்சியர் தா.பிரியதர்ஷினி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், சேலம் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

### தமிழ்நாட்டின் உரிமைகள் – நலன்களுக்காக

# நாடாளுமன்றத்தில் நாள்தோறும் குரல் எழுப்பும் கழக எம்.பி.க்கள்!

நாள் : 4.02.2025



## தொடர் கேள்விக் கணைகளால் திணறுகிறது ஒன்றிய அரசு!

**1. நூறு நாள் வேலை ஊதியம் - தாமதம் ஏன்?**

**கலாநிதி வீராசாமி**




மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் போதிய வேலைவாய்ப்புகள் ஏற்படுத்துவதில் ஒன்றிய அரசு தவறுகிறது என வட சென்னை மக்களவை திமுக உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி குற்றம்சாட்டியுள்ளார். அதேபோல் இத்திட்டத்தின்கீழ் மக்களுக்கு தாமதமாக ஊதியம் கிடைக்கப் பெறுவதையும் அவர் சுட்டியுள்ளார்.

மாநில மற்றும் உள்ளூர்மட்டங்களில் நிதிகளை நிர்வகிப்பதில் வெளிப்படைத்தன்மையும் பொறுப்புணர்வையும் அரசு உறுதி செய்ய வேண்டும், கிராமப்புற மக்களிடையே நூறு நாள் வேலை திட்டத்தின்கீழ் அவர்களின் உரிமைகள் குறித்து விழிப்புணர்வை அதிகரிக்க செய்ய வேண்டும் போன்ற கோரிக்கைகளையும் அவர் எழுப்பியுள்ளார்.

**2. நாய்க்கடியால் பாதிக்கப்பட்ட 22 லட்சம் பேர்! தீர்வு என்ன?**

**அருண் நேரு**



கிராமப்புறப் பகுதிகள் மற்றும் நகரங்களில் நாய்கள், குரங்குகள் உள்ளிட்ட தெருவிலங்குகளினால் மக்கள் மிகுந்த சிரமங்களுக்கு உள்ளாவதை குறிப்பிட்டும் உயிராபத்து ஏற்படுவதை தடுக்க வலியுறுத்தியும் பெரம்பலூர் மக்களவை உறுப்பினர் அருண் நேரு இன்று நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார்.

அதில் அவர் தெருவில் நாய்களினால் ஏற்படும் ஆபத்தை தடுக்கும் நடவடிக்கைகள் எடுக்க உள்ளாட்சி அமைப்புகளிடம் போதுமான நிதி இல்லை என்பதை சுட்டிக் காட்டினார்.

இதுவரை நாடு முழுவதும் காயமடைந்த குழந்தைகள் பற்றிய விவரங்களை அரசு வெளியிட வேண்டுமென கேட்டுக் கொண்ட அருண் நேரு, குழந்தைகள் பாதிக்கப்படுவதை தடுக்க உடனடியாக ஒன்றிய அரசு வலிமையான திட்டங்கள் வகுத்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

**3. தமிழ்நாட்டு ஜவுளி ஏற்றுமதியை அதிகரிக்க கோரிக்கை**

**சி.என். அண்ணாதுரை**

**க.செல்வம்**





பருத்தி, செயற்கை இழைகள் மற்றும் ஆயத்த ஆடைகள் உள்ளிட்ட முக்கிய பிரிவுகளில் கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்தியாவின் ஜவுளி ஏற்றுமதி செயல்திறன் குறித்து திருவண்ணாமலை மக்களவை உறுப்பினர் சி. என். அண்ணாதுரை மற்றும் காஞ்சிபுரம் மக்களவை உறுப்பினர் செல்வம் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளனர்.

அடுத்த மூன்று ஆண்டுகளில் இந்திய ஜவுளிப் பொருட்கள் ஏற்றுமதியை அதிகரிக்க அரசு வகுதுள்ள கொள்கைகள் மற்றும் உத்திகள், கடந்த மூன்று ஆண்டுகள் மற்றும் நடப்பு ஆண்டில் ஜவுளி ஏற்றுமதியில் தமிழ்நாடு அரசின் பங்களிப்பு, தமிழ்நாட்டில் மொத்தம் பதிவு செய்யப்பட்ட ஜவுளித்தொழில்கள் மற்றும் தொழிற்சாலைகள் எத்தனை, ஏற்றுமதியை அதிகரிக்க அரசிடம் உள்ள நிதி உதவித்திட்டங்கள் போன்றவற்றின் விவரங்களை வெளியிடுமாறு அவர் தனது கேள்வியில் குறிப்பிட்டு ள்ளார்கள்.

**4. மீனவர்களுக்கு அரசு வீடுகள்**

**கதிர் ஆனந்த் கோரிக்கை**



தமிழ்நாட்டில் உள்ள மீனவர் சமூகத்தினருக்கு சுனாமி மற்றும் வெள்ளத் தடுப்பு வீடுகள் வழங்க ஒன்றிய அரசிடம் உள்ள திட்டங்களின் விவரங்களை கேட்டு வேலூர் மக்களவை உறுப்பினர் கதிர் ஆனந்த் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார். கடந்த ஐந்தாண்டுகளில் தமிழ்நாட்டில் இத்திட்டங்களின்கீழ் பயனடைந்தவர்களின் விவரங்கள் மற்றும் ஒதுக்கப்பட்ட நிதியின் அளவு ஆகியவற்றையும் அவர் கோரியுள்ளார்.

மேலும் மீனவர்களுக்கு போதுமான வீட்டுவசதி, கல்வி, விளையாட்டு மற்றும் மருத்துவ உள்கட்டமைப்பு வசதிகளை ஒன்றிய அரசு மேம்படுத்தவேண்டும் எனவும் அவர் கோரிக்கை வைத்துள்ளார்.



துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் படி வாக்குச்சாவடி இளைஞர் அணி பொறுப்பாளர் நியமிக்கும் விண்ணப்பப் படிவத்தை விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதம சிகாமணி, விழுப்புரம் நகரச் செயலாளர் இரா.சக்கரை, கோலியனூர் கிழக்கு ஒன்றியச் செயலாளர் பி.தெய்வசிகாமணி, கண்டமங்கலம் மேற்கு ஒன்றியச் செயலாளர் வி.ஜி.பிரபாகரன், காணை தெற்கு ஒன்றியச் செயலாளர் கல்பட்டு வி.ராஜா, வளவனூர் பேரூர் செயலாளர் பா.ஜீவா ஆகியோரிடம் வழங்கினார். மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் செ.தினகரன், நகர அமைப்பாளர் செ. மணிகண்டன், ஒன்றிய அமைப்பாளர்கள் ராஜசேகர், ஏழுமலை, குமரன் உடன் உள்ளனர்.